## காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, மாசி மாதம் 23ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 07ஆம் தேதி, சனிக்கிழமை**

*குறள்:398*

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

*குறள் விளக்கம்:*

ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

### பொன்மொழி

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்களில் மிக மிக உயர்ந்தது பொறுமை.

### பழமொழி

*A constant guest is never welcome*

விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு

### பொதுஅறிவு வினா விடை

- தமிழ்நாட்டில் போடப்பட்ட முதல் இருப்புப் பாதை – ராயபுரம் முதல் வாலாஜா வரை (1856)
- சித்திரைத் திருவிழா சிறப்பாக நடைபெறும் மாவட்டம் - மதுரை

### இரண்டொழுக்க உறுதிமொழி

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

*Abbreviations*

- C.A. - Chartered Accountant - பட்டய கணக்காளர்
- CIA - Central Intelligence Agency - மத்திய புலனாய்வு முகமை

## இன்றைய செய்திகள்

- வருகிற 11 ஆம் தேதி முதல் நாடாளுமன்றத்தை பார்வையிட வரும் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்படுவதாக, மக்களவை செயலர் அறிவித்துள்ளார்.
- டெல்லி வன்முறை சம்பவம் குறித்து நாடாளுமன்றத்தில் வரும் 11ம் தேதி நடக்கும் விவாதத்தில் எதிர்கட்சிகளின் கேள்விகளுக்கு, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா விளக்கம் அளிக்க உள்ளார்.
- பெண்கள் 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில், இங்கிலாந்துக்கு எதிரான அரைஇறுதி ஆட்டம் மழையால் ரத்தானதால் இந்திய அணி முதல்முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.
- வெப்பசலனம் காரணமாக தமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தமிழக காவல்துறைக்கு ரூ.95.58 கோடி மதிப்புள்ள 2 ஆயிரத்து 271 வாகனங்களை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று வழங்கினார்.
- கொரோனாவை தடுப்பது சவாலான பணி... பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் - என சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் வேண்டுகோள் விடுத்து உள்ளார்.
- போலீஸ் பணிக்கான தேர்வு நடைமுறையில் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை என்று சென்னை ஐகோர்ட்டில் சீருடை பணியாளர் தேர்வாணையம் பதில் மனு தாக்கல் செய்துள்ளது.